# நமது வலிமைக்கான வரவுசெலவுத் திட்டம்

**ஊழியர்கள் வேலையில் நீடிக்கவும் வேலைத்தகுதியுடன் இருக்கவும் உதவி**

## வேலை ஆதரவுத் திட்டம்



- **2020 ஆகஸ்ட்** மாதச் சம்பளத்திற்கும் ஆதரவளிக்க, **ஒரு மாதத்திற்குத் திட்டம் நீட்டிக்கப்படுகிறது**
- மீண்டும் செயல்பட அனுமதிக்கப்படாத நிறுவனங்களுக்கு, எது முன்னதாக நிகழ்கிறது என்பதன் அடிப்படையில், **2020 ஆகஸ்ட்** வரை, அல்லது மீண்டும் செயல்பட அனுமதிக்கப்படும் வரை, தொடர்ந்து **75% சம்பள ஆதரவு** கிடைக்கும்
- குறிப்பிட்ட துறைகளுக்கான **ஆதரவு** 25%-லிருந்து 50% அல்லது 75% வரை **அதிகரிக்கப்படுகிறது**
- தகுதிபெறும் துறைகள் முந்திய வழங்குதொகைகளுக்கு **நிரப்புத்தொகையும்** பெறுவார்கள்

## எஸ்ஜி ஒற்றுமை வேலைகள், திறன்களுக்கான தொகுப்புத்திட்டம்





- கிட்டத்தட்ட **100,000** வேலைகள், வேலைப் பயிற்சித் திட்டங்கள், பயிற்சி வாய்ப்புகள் ஆகியவற்றை உருவாக்க **$2 பில்லியன்** ஒதுக்கப்படுகிறது
  - **எஸ்ஜி ஒற்றுமை வேலைகள்**: **40,000** புதிய வேலைகள், இதில் **15,000** வேலைகளைப் பொதுத் துறையும், **25,000** வேலைகளைத் தனியார் துறையும் வழங்கும்
  - **எஸ்ஜி ஒற்றுமை வேலைப் பயிற்சித் திட்டம்**: முதல்முறையாக வேலை தேடும் உள்ளூர் மக்கள், அதிக வரவேற்புள்ள துறைகளில் தேவையான அனுபவம் பெற உதவியாக **21,000** வேலைப் பயிற்சித் திட்டங்கள்
  - **எஸ்ஜி ஒற்றுமை பணியிடைக்கால வேலைப் பயிற்சித் திட்டம்**: வேலை தேடும் வேலையில்லாத பணியிடைக்கால உள்ளூர் மக்கள் புதிய திறன்களைக் கற்றுக்கொண்டு புதிய வாழ்க்கைத்தொழிலைத் தொடங்குவதற்கு **4,000** வேலைப் பயிற்சித் திட்டங்கள்



  - **எஸ்ஜி ஒற்றுமை திறன்கள்**: வேலை தேடும் **30,000** உள்ளூர் மக்கள், வேலை தேடிக்கொண்டிருக்கும் போதே திறன்களை மேம்படுத்திக் கொள்ளலாம். அவர்களது அடிப்படைச் செலவுகளுக்கு **மாதத்திற்கு $1,200** பயிற்சி படித்தொகை கிடைக்கும்
- **வேலைக்கு ஆள் எடுக்க, முதலாளிகளுக்கான ஊக்குவிப்புத் தொகையாக ஓர் ஊழியருக்கு $12,000 வரை** கிடைக்கும். தகுதிபெறும் மாற்றுத்திறன், பயிற்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்த உள்ளூர் ஊழியர்களை வேலைக்கு எடுக்கும் முதலாளிகள் இதற்குத் தகுதி பெறுவார்கள்


# நமது வலிமைக்கான வரவுசெலவுத் திட்டம்

**வர்த்தகங்களின் செலவு, ரொக்கப்புழக்கம், கடன்பற்றுகளுக்கு உதவி**



## வெளிநாட்டு ஊழியர் தீர்வைக்கான விலக்கு மற்றும் தள்ளுபடி

- மீண்டும் செயல்படத் தொடங்கமுடியாத வர்த்தகங்களுக்கு, தீர்வை விலக்கும் தள்ளுபடியும் **நீட்டிக்கப்படுகிறது**
  - **2020 ஜூன்** மாதம் **100%** விலக்கு மற்றும் **$750** தள்ளுபடி
  - **2020 ஜூலை** மாதம் **50%** விலக்கு மற்றும் **$375** தள்ளுபடி
- எது முன்னதாக நிகழ்கிறது என்பதன் அடிப்படையில், **2020 ஆகஸ்ட் மாதத்திலிருந்து**, அல்லது தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குச் செல்ல முடியும்போது, தீர்வை விகிதங்கள் வழக்கநிலைக்குத் திரும்பும்




## வாடகை நிவாரணம் விரிவாக்கம்

- **சிறிய, நடுத்தர நிறுவனங்களின் வாடகைச் செலவுகளுக்கு** உதவ, சுமார் **$2 பில்லியன் ரொக்க மானியங்கள்**
- குறிப்பிடத்தக்க வருமான இழப்பால் பாதிப்படைந்த சிறிய, நடுத்தர நிறுவன வாடகைதாரர்களுக்கு, உரிமையாளர்கள் வாடகை விலக்கு அளிப்பது **கட்டாயமாக்கப்படுகிறது**
- உணவங்காடி நிலையங்களிலும் ஈரச்சந்தைகளிலும் உள்ள கடைக்காரர்களுக்கும், அரசாங்கச் சொத்துகளின் வர்த்தக மற்றும் குடியிருப்பு அல்லாத மற்ற வாடகைதாரர்களுக்கும் **கூடுதலான வாடகை விலக்குகள்** கிடைக்கும்



## கூடுதலான மசேநி சந்தா விகிதங்கள் ஒத்திவைப்பு

- மூத்த ஊழியர்களுக்கான **மசேநி சந்தா விகித அதிகரிப்பு**, 1 ஜனவரி 2021 முதல் 1 ஜனவரி 2022 வரை, ஓராண்டு காலத்திற்கு **ஒத்தி வைக்கப்படுகிறது**



## நம்பிக்கையளிக்கும் புதிய நிறுவனங்களுக்கு நிதி ஆதரவு

- புதிய நிறுவனங்களின் புத்தாக்க, தொழில்முனைப்பு நடவடிக்கைகளைக் கட்டிக்காக்க, தனியார் முதலீடுகளுக்கு ஆதரவும் இணை உதவியும் வழங்க **$285 மில்லியன்** ஒதுக்கப்படுகிறது

# நமது வலிமைக்கான வரவுசெலவுத் திட்டம்

**புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள உருமாற்றத்திற்கு ஊக்குவிப்பு**

## மின்னிலக்கமயமாதலின் வேகம் நிலைநாட்டப்படும்




- பின்வரும் கடைக்காரர்கள் **மின்-கட்டணமுறைகளைப்** பயன்படுத்த ஊக்குவிப்பாக, **ஐந்து மாதங்களுக்கு மாதந்தோறும் $300** வழங்கப்படும்:
  - உணவங்காடி நிலையங்கள்
  - ஈரச்சந்தைகள்
  - காப்பிக் கடைகள்
  - தொழிற்பேட்டை தேநீரகங்கள்
- உணவு, பானக் கடைகளும் சில்லறை வர்த்தகங்களும் மின்னிலக்கமயமாவதற்கு உதவியாக, **$5,000 வரையிலான மின்னிலக்க மீள்திறனுக்கான ஊக்கத்தொகை** வழங்கப்படும்:
  - PayNow நிறுவனச்சேவை
  - மின்-கட்டணச்சீட்டு
  - தொழில்முறை அல்லது மின்-வர்த்தகச் செயல்முறைகள்



- அதிநவீன செயல்முறைகளைப் பயன்படுத்தும் உணவு, பான, சில்லறை வர்த்தகங்களுக்குக் **கூடுதலாக $5,000**
- ஊடகத்தள செயல்முறை நிறுவனங்கள், தொழில்துறை சாதனையாளர்கள் ஆகியோருடன் **கூட்டிணைந்து மின்னிலக்கமயமாகும்** வர்த்தகங்களுக்கு உதவ **$250 மில்லியன்** ஒதுக்கப்படுகிறது

## புத்தாக்கத்தின்வழி பயன்மிக்க மின்னிலக்க உருமாற்றம்



- தனியார் துறையுடன் பங்காளித்துவங்களை அமைத்து, சிங்கப்பூரைப் பாதுகாப்பான முறையில் மீண்டும் திறப்பதற்குத் தொழில்துறை வழிநடத்தும் செயல்முறைகளை நடைமுறைப்படுத்த ஊக்குவிப்பாக **தேசிய புத்தாக்கச் சவால்கள்**

# நமது வலிமைக்கான வரவுசெலவுத் திட்டம்

**சமூக மீள்திறன் வலுவாக்கப்படும்**

## ஊழியர்களுக்கு நிதி நிவாரணம்

- வேலைகளை இழந்த, சம்பளமில்லாத விடுப்பில் வைக்கப்பட்ட, அல்லது கொவிட்-19 காரணமாகக் குறிப்பிடத்தக்க வருமான இழப்புக்கு உள்ளான சிங்கப்பூரர்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்க, **கொவிட்-19 ஆதரவு மானியத்திற்குக் கூடுதலாக $800 மில்லியன்** ஒதுக்கப்படுகிறது

## வீட்டில் இருப்பதற்காகும் செலவுக்கு உதவி

- குறைந்தது ஒரு சிங்கப்பூரர் உள்ள அனைத்து குடித்தனங்களுக்கும் ஒருமுறை மட்டும் **$100 ஒற்றுமைக்கான பயனீட்டு உதவித்தொகை** வழங்கப்படும். **அனைத்து வகையான வீடுகளும்** இதற்குத் தகுதிபெறும். எஸ்பி குழுமத்தின் 2020 ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதப் பயனீட்டுக் கட்டணச்சீட்டில் உதவித்தொகை சேர்க்கப்படும்
- ஒற்றுமைக்கான வழங்குதொகை, பராமரிப்பு மற்றும் ஆதரவுத் தொகுப்புத்திட்டம் ஆகியவற்றுக்கு மேலாக இந்த உதவியும் வழங்கப்படுகிறது

## மின்னிலக்கப் பயன்பாடு வளர்க்கப்படும்

- உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அனைவரும் சொந்த மின்னிலக்கக் கற்றல் சாதனத்தைப் பெறுவதற்குத் **துரிதமான காலத்திட்டம்**
- நேர்முகப் பயிற்றுவிப்பு, சிறிய குழுக்களாகக் கற்றல் ஆகியவற்றின் மூலமாக மின்னிலக்க அறிவாற்றலை வளர்ப்பதற்கு **மூத்தோருக்கான மின்னிலக்கமயமாதல் இயக்கம்**
  - குறைந்த வருமானம் ஈட்டும் மூத்தோர்கள் சொந்த சாதனம் வாங்க **நிதி ஆதரவு**

## வலுவான சமூகச்சேவைத் துறை உருவாக்கப்படும்

- டோட் வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட நிதித் திரட்டுத் திட்டத்தின்கீழ் 1 ஏப்ரல் 2020 முதல் 31 மார்ச் 2021 வரை திரட்டப்படும் தகுதிபெறும் நன்கொடைகளுக்கு, **வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையிலான இணை நிதி. ஒவ்வோர் அறப்பணி அமைப்புக்கும் அதிகபட்சம் $250,000 இணை நிதி** கிடைக்கும்
- சமூகச் சேவை அமைப்புகள் தொடர்ந்து சேவை வழங்கவும், ஊழியர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் உதவும் **மனவுர நிதிக்கு $18 மில்லியன்** நிரப்புத்தொகை